மேற்கொண்டார். முதன்மைக் கல்வி அதிகாரியின் ஆணைப்படி பள்ளி நிர்வாகத்தினர் அவ்வாசிரியரைப் பள்ளியில் மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொள்ள மறுத்ததே அதற்குக் காரணமாகும்.

(உ) மாவட்டக் கல்வி அதிகாரி தலையீட்டினால், அவ்வாசிரியர் உண்ணு நோன்பை நிறுத்தினர். பள்ளிக் கல்வி இயக்குநர் பள்ளி நிர்வாகத்தினரின் அப்பீல் மனுவை நிராகரித்து ஆணையிட்டார். அதையொட்டி ஆசிரியர் 8—2—72 ம் நாள் அப்பள்ளியில் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்.

Teacher Pensioners

*** 175 *Q*.—THIRU G. SWAMINATHAN**: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether 50 per cent of the Dearness Allowance recommended by the Second Pay Commission to teacher pensioners has been paid to teachers retired from aided institutions; and

(*b*) if not, when such payment can be expected?

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இரண்டாவது சம்பள ஆணைக் குழுவால் பரிவுரை செய்யப்பட்ட 50 சதவீத அகவிலைப் படி, மானியம் பெறும் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், அது எப்போது கொடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படலாம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இரண்டாம் சம்பளக்குழு இப்பொழுது வரையறுத்துள்ள கிராக்கிப்படிக்கு மேலாக உயர்வு கிராக்கிப்படியளிக்கக் குறிப்பிடும்பொழுது அந்த உயர்வில் பாதியை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் அளிக்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1—5—72 முதல் அரசுப் பணியாளர்களுக்கு ஏப்ரல் திங்களில் வழங்கிய கிராக்கிப்படியில் (ஒத்த வீதத்தில் ரூ. 10) 50 விழுக்காடு அளவில் ஓய்வு பெற்ற எல்லா ஆசிரியர்களுக்கும் ரூ. 5 கிராக்கிப்படியாக அளிக்க ஆணையிட்டுள்ளனர்.

1972 ஆகஸ்ட் 22]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர்கள் வாங்குகிற ஓய்வு ஊதியத்தில் 50 சத விகிதம் கிராக்கிப்படி கொடுக்க வேண்டுமென்று இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. ரூ. 40-க்குள்ளாக வாங்குபவர்களுக்கு அந்த ரூ. 5-ம் கிடையாது என்று நிர்ணயிக்கப்பட்டு ரூ. 40-லிருந்து ரூ. 200 வரை வாங்குபவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். ரூ. 40-க்கு உட்பட்டவர்களுக்குக் கொடுப்பதில்லை. ஆகவே ஏழை ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு ரூ. 40-க்குள்ளாக வாங்குபவர்களுக்கும் ரூ. 5 கிராக்கிப்படி கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கிராக்கிப்படி ரூ. 10 உயர்த்தியபோது 50 சதவிகிதம் என்றால் ரூ. 5 வழங்கப்படுகிறது. ரூ. 40-க்கு உட்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறதா இல்லையா என்பது பற்றிக்குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கு விடை அளிக்கப்படும்.

Marriage Loan Applications from Teachers

* 176 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of marriage loan applications received from teachers in Government Secondary Schools (District Board High Schools) in Thanjavur district and lying undisposed of at the Office of the Director of School Education, Madras; and

(b) the reasons for delay, if any, in their disposal?

ஆசிரியர்களின் திருமணக் கடன் விண்ணப்பங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளிகளைச் (மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள்) சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து வரப்பெற்று, சென்னையிலுள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் முடிவு செய்யப்படாமலுள்ள திருமணக் கடன் விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) இவற்றை முடிவு செய்வதில் காலதாமத மேற்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவை?